**செய்தி வெளியீடு எண்: 310** **நாள்: 02.05.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

இந்தியா முழுவதும், கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுப்பதற்காக தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ் ஊரடங்கு உத்தரவு 25.03.2020 முதல் அமலில் இருந்து வருகிறது. இதனால், தேசிய அளவில் விமான சேவை, இரயில் சேவை மற்றும் பொது போக்குவரத்து சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால், தமிழ் நாட்டைச் சேர்ந்த பல மாணவர்கள், சுற்றுலாப் பயணிகள், யாத்திரிகர்கள், உள்ளிட்டோர் பல்வேறு இடங்களில் உள்ளனர்.

இந்தியாவின் இதர மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டிற்கு திரும்ப விரும்பும் தமிழர்கள் **nonresidenttamil.org** என்ற இணைய முகப்பில் உள்ள "<u>Return to Tamil Nadu</u>" என்ற இணைய படிவம் (பச்சை நிற பதிவு பட்டன்) வாயிலாக பதிவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று, இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்தோர், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் தற்போது தங்கியுள்ளனர். அவர்கள் குறித்த விபரத்தை **nonresidenttamil.org** என்ற இணைய முகப்பில் (பழுப்பு நிற பதிவு பட்டன்) வாயிலாக பதிவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**